## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S.No.103/2013

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | சாகுல் ஹமீது |
| Father's Name | : | முகம்மது ஷா |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 21.11.2025.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 2ம் வாதியின் கணவராவேன். என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 14.08.1999 தேதியில் வாதிகளும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கொண்ட கூட்டாணை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 15.12.2020 தேதிய கூட்டாண்மை ஒப்பந்த பதிவு சான்று அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 15.12.1999 நாகூர்மைதீன் என்பவரிடமிருந்து 2ம் பிரதிவாதி வாங்கிய கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 09.05.2001 கிருஷ்ணசாமி வகையறாவிடமிருந்து 2ம் பிரதிவாதிவாங்கிய கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 02.08.2002ல் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 07.02.2023ல் 2ம் பிரதிவாதி கூட்டாண்மைநிறுவத்திதல்இருந்து விலகி கொண்டு 1ம் பிரதிவாதி பொறுப்பேற்ற போது Retirement deed அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. பிராது தபசில் சொத்துக்குரிய சிட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 20.06.2012ல் 1ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 25.04.2013ல் 1ம் பிரதிவாதி, தனது பிள்ளைகளளான O.M.ஜமால் மைதீன், உமர் பாரூக், சிராஜ்நிஷா ஆகியோர்களுக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 24.09.2013 தேதியில் O.M.ஜமால் மைதீன், உமர் பாரூக், சிராஜ்நிஷா ஆகியோர் 13ம்பிரதிவாதியின் பொதுஅதிகாரம் பெற்ற முகவரான12ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 15.09.2016 ல் O.M.ஜமால் மைதீன், உமர் பாரூக், சிராஜ்நிஷா ஆகியோர்கள் 13 பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடுசெய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மையும், தொடர்புடைமையும் வழக்கின் இறுதிவிசாரணையின் போது முடிவு செய்யப்படும்.

**குறுக்குவிசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

1. நான் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறையில் பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் பி.இ. படித்துள்ளேன். நான் ஓய்வு பெற்று தற்போது 7 ஆண்டுகளாகிறது. பிராதில் சொல்லப்பட்டுள்ள கூட்டாண்மை தொழில் காலத்தில் நான் பணியில்தான் இருந்தேன். நான் 2ம் வாதியின் கணவர் என்ற நிலையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் வாதி, 2ம் வாதியின் உடன்பிறந்த இளைய சகோதரி என்றால் சரிதான்.

2. 1ம் வாதி 04.10.2012 ல் 2ம் வாதிக்கு வழக்கை நடத்த பொதுஅதிகார பத்திரம் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பவர் அங்கீகாரத்திற்காக வழங்கப்பட்டு மாண்புமிகு நீதமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு உள்ள ஆவணமாகும். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்துப்பார்த்துள்ளேன். எனக்கு வழக்கின் விவரங்களும் நன்குதெரியும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் Sha crushers கூட்டாண்மை தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யவும், நடத்தவும் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் சரி என்றால் சரிதான்.

4. Sha crushers தொடர்பன ஆவணங்கள் இந்நீதிமன்றததால் உரிமையியல் நடைமுறை விதி 76ன் கீழ் பதிவுத்துறையால் பெறப்பட்ட ஆவணம்தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 25.02.2013ம் தேதியில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த தேதியில் பிராதில் சொல்லும் கூட்டாண்மை அரசுபதிவுத்துறையில் பதிவில் இல்லை என்றால் பின்னால் பதிவு செய்யப்பட்டது. எப்போது புதுப்பிக்கப்பட்டது என்றால் 2021ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது. 2021ல் நான் குறிப்பிடுவதுபோல் கூட்டாண்மையை புதுப்பிக்கும் சமயத்தில் 1ம் பிரதிவாதி உயிருடன் இல்லை என்றால் சரிதான். ஆனால் அரசுத்துறை ஆவணத்தில் 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்ததாகதான் சொல்லி புதுப்பிக்கப்ட்டுள்ளது என்றால் சாட்சி புதுப்பிப்பதற்கு யாருடைய கையொப்பமும் தேவையில்லை எனகூறினார். ஆனால் 1ம் பிரதிவாதி இறந்ததததை புதுப்பிக்கும் சமயத்தில் பதிவுத்துறை தெரிவிக்கவில்லை என்றும் அவர் கூட்டாளியாக இருப்பதுபோல் கண்டுதான் புதுப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

6. நான் அரசுத்துறையில் பணியாற்றியதால் பொது ஊழியர்கள் நடத்தை விதிக்கு கட்டுப்படுவேன் என்றால் சரிதான். என்னுடைய மனைவிக்கு தனிவருமானம் கிடையாது என்றால் அவரது பிறந்த வீட்டில் இருந்து வருமானம் உண்டு. எனது மனைவிக்கு பிறந்த வீட்டில்இருந்து வருமானம் வந்தது என்பதை நான் எனது துறைக்கு Declaration கொடுத்திருக்க வேண்டும் என்றால் யாரும் அரசுத்துறையில்இருந்து என்னிடம் கேட்கவில்லை, நான் கொடுக்கவில்லை. அரசுத்துறையில் நான் பணியில் சேரும்போது எனக்கும் எனது குடும்பத்தின் சொத்துக்களையும், கடன்களையும் நான் அரசுக்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். அதுபோல் நான் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மனைவி கூட்டாண்மையில் இணைவதற்கும் அரசிடம் இருந்து அனுமதி வாங்கவேண்டும் என்றால் சரியல்ல.

7. எனது பணியின் காலத்தில் எத்தனைமுறை இடைக்கால பணிநீக்கம் செய்யப்பட்டேன் என்றால் ஒருமுறை கூட செய்ததில்லை பிரதிவாதிகள் நான் 4 முறை இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்டேன் என கூறுவது தவறு. 2 வாதிகளுடைய கணவர் பெயரும் O.M.சாகுல்ஹமீது என்றால் சரிதான், இருவருமே வேறு வேறு நபர்கள் என்றால் சரிதான். மற்றொரு O.M.சாகுல் ஹமீதும் உயிருடன்தான் உள்ளார். பிராதில் சொல்லப்பட்டுள்ள Sha crushers கூட்டாண்மை என்பது வருமான வரி விதிக்கப்பட்ட ஸ்தாபனம் என்றால் சரிதான்.

8. பிரதிவாதி தரப்பில் 2001 முதல் 2006 வரை 5 ஆண்டு வருமானவரி கணக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நானும் தனிப்பட்ட முறையில் வருமான வரி விதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். பொதுவாக வருமான வரி கணக்கு செலுத்தும்போது செலுத்தும்நபரின் சொத்துக்களில் உள்ள வருமானத்தையும் குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். பிராதில் சொல்லியுள்ள 21 ஏக்கர் 50 செண்ட் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கூட்டாண்மைக்கு பாத்தியப்பட்டது என துலங்காது என்றால் சரிதான். பிராதுதபசில் சொத்துகூட்டாண்மைக்கு பாத்தியப்பட்டிருந்தால் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் துலங்கியிருக்கும் என்றால் சரியல்ல.

9. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் Sha crushers க்கு 6 ½ ஏக்கர் தான் உள்ளது என்றால் சரிதான், அதுமட்டும் பாத்தியப்பட்டது அல்ல, அதற்கு அருகாமையில் உள்ள 21 ½ ஏக்கரும் பாத்தியப்பட்டது என நான் கட்சி செய்கிறேன். 21 ½ ஏக்கரும் Sha crushers க்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 முதல் 11 ஆவணங்களில் மேற்படி 21 ½ ஏக்கரும் Sha crushers துலங்காது என்றால் சரியல்ல, கூட்டாண்மை பதிவில் உள்ளது. கூட்டாண்மை ஆவணங்கள் என நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி பிராதில் தபசில் கண்ட சொத்துக்கள் Sha crushers க்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் துலங்காது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கூட்டாண்மை ஆவணங்களில் சொத்துவிவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 14.08.1999 கூட்டாண்மை ஆவணத்தில் Column 12 ல் அப்துல்கரீம் முபாரக்

பெயரில் உள்ள சொத்துக்கள் மற்றும் உரிமங்கள் பிராதில் சொல்லியுள்ள கூட்டாண்மைக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாட்சியிடம் தற்போது வா.சா.ஆ.1 ஆவணம் காண்பிக்கப்பட்டு அதில் காலம் 12ல் குறிப்பிடப்பட்டுள்ளது என கூறினார். நான் வா.சா.ஆ.1 ஆவணம் காலம் 12ல் உள்ள சங்கதிகளை தவறாக பயன்படுத்தி பிராது தபசில் சொத்துக்கள் Sha crushers சொத்துக்கள் என உரிமை கோருகிறோம் என்றால் சரியல்ல.

10. 1ம் வாதி தற்போது கடையநல்லூரில் தான் உள்ளார். 1ம் வாதி நல்ல ஆரோக்கியமாகதான் உள்ளார் என்றால் சரிதான். இதற்கு முன்பு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைக்காலமனுக்கள் அனைத்திலும் பிரமாணப்பத்திரத்திலும் 2ம் வாதி தென்காசிக்கு வந்து கையொப்பம் செய்துள்ளதாக துலங்குகிறது என்றால் சரிதான். வாதிகள்சாட்சியம் அளிக்க வந்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. வழக்கு காலத்திற்கும், அதற்கு முன்பும் நான் வெளிமாவட்டங்களில் பணிபுரிந்துவந்தேன் என்றால் சரிதான். கூட்டாண்மை தொடங்கிய காலத்தில் இங்குதான் இருந்தேன், 2010ம் ஆண்டிலிருந்து தான் நான் வெளிமாவட்டங்களில் வேலை செய்துவந்தேன். வழக்கு தாக்கல் செய்யும்போது புதுக்கோட்டையில் பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான்.

12. பிராது தபசில் உள்ளடங்கிய 23 ஏக்கர் 67 செண்டை 2ம் பிரதிவாதி 1999ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 23 ஏக்கர் 67 செண்டில் குறிப்பாக 21 ½ செண்ட் மட்டுமே Sha crushers பாத்தியப்பட்டது என குறிப்பாக கேட்கிறோம் என்று பிராதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மீதமுள்ள 2 ஏக்கர் 73 செண்டை 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டாண்மை வாங்கிவிட்டது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13. 1ம் வாதி வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான், தேதி ஞாபகம் இல்லை. 1ம் வாதியின் கடவுச்சீட்டில் அவர் கணவர் பெயர் ஜமால் முகைதீன் என துலங்கும் என்றால் எனக்கு தெரியாது. தவறான முகவரியில் தவறான கடவுச்சீட்டு பெற்று 1ம் வாதி சென்றுவந்தார் என்றால் வழக்கிற்கு தொடர்பற்றது என்றும் அதுபற்றி எனக்கு தெரியாது என்றும் கூறினார்.

14. வாதிகள் இருவரும் இறந்துபோன 1ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரி மகள்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்திலோ, 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்குகொடுத்த கிரைய ஆவணத்திலோ சொத்துகள் Sha crushers க்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என துலங்காது என்றால் சரிதான்.

15. கூட்டாண்மை தொழில் 2006 வரை நடைபெற்றதா என்று கேட்டால் வழக்கு தாக்கல் செய்யும் சமயம் வரை நடைபெற்றது. இ.ம.எண்.20/2025 நாங்கள் குறிப்பிட்டுள்ள 15ம் எதிர்மனுதாரர் Vishal

Exports Overseas limited 2006 ம் ஆண்டு கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். நாளதுதேதிவரை மேற்படி நிறுவனத்திற்குதான் சொத்துக்கள் உள்ளதா என்றால் எனக்கு அந்தசொத்துக்கள் யார் வசம் உள்ளது என்று தெரியாது. 2006 லிருந்து மேற்படி சொத்து யார் அனுபவத்தில் இருந்துவருகிறது என தெரியாது என்றால் சரிதான்.

16. இந்த வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் மேற்படி சொத்தின் உரிமையாளர் Vishal Exports Overseas limited என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. ஆவணத்தின்படி அவர்தான் உரிமையாளர் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதிகள் Sha crushers ன் கூட்டாளிகள் என்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

17. வா.சா.ஆ.6 ஆவணம் பிரிவு 13 ல் Partner shall sue and be sued in the name of firm viz M/s. sha crushers through anyone of its என்றுஉள்ளது. Firm மீது தான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யவில்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/−K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.